Australian Government
Department of Social Services

# குடும்ப வன்முறையும் ‘வாழ்க்கைத் துணை விசாக்களும்’

## அவுஸ்திரேலியாவில் இருக்க வேண்டும் என்பதற்காக வாழ்க்கைத் துணைவர் விசாவின் கீழ் இருப்பவர்கள் துஷ்பிரயோக வாழ்க்கைத் துணை உறவில் இருக்க வேண்டியதில்லை.

வீட்டு, குடும்ப வன்முறை அவுஸ்திரேலியாவில் ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை.

வாழ்க்கைத் துணைவர் ஒருவரோ, குடும்ப அங்கத்தவர்களோ அல்லது சமூகத்திலுள்ள மற்றவர்களோ உங்களது விசா தகுதி நிலைக்கு ஆபத்து ஏற்படுத்த இயலாது.

தற்காலிக ‘வாழ்க்கைத் துணைவர் விசா’ (உபபிரிவு 309 அல்லது 820) ஐ அல்லது திருமண எதிர்பார்ப்பு விசா (உபபிரிவு 300) ஐக் கொண்டிருந்து, குடும்ப வன்முறைக்கு ஆளாகி உங்களது மண உறவு முறிந்து போயிருந்தால், உங்களது நிரந்தர ‘வாழ்க்கைத் துணை விசா’ (உபபிரிவு 100 அல்லது 801) விண்ணப்பத்தினைத் தொடர உங்களை அனுமதிக்கும் வழிமுறைகள் அவுஸ்திரேலிய புலப்பெயர்வுச் சட்டங்களில் உள்ளன.

நீங்களோ உங்களுக்குத் தெரிந்த எவருமோ ஆபத்திலிருந்தால் **000** இல் பொலிசாரை அழையுங்கள்.

*அவுஸ்திரேலியாவிலுள்ள பொலிசார் பாதுகாப்பானவர்கள், நம்பத் தகுந்தவர்கள்.*

இலவச, இரகசியம் பேணும் ஆலோசனைக்கும் தகவல்களுக்குமாக **1800 737 732** இல் 1800RESPECT ஐ அழையுங்கள்.

உங்களுக்கு ஓர் இலவச உரைபெயர்ப்பாளர் தேவையாயின் **131 450** ஐ அழையுங்கள்.

## எச்சூழ்நிலைகளிலும், வீட்டு, குடும்ப வன்முறையை Australian Government சகித்துக்கொள்வதில்லை.

வீட்டு, குடும்ப வன்முறைகள் சட்டத்திற்கெதிரான குற்றங்கள்.இக்குற்றங்களை இழைக்கும் யாருக்கும் சிறைத்தண்டனை கிடைக்கக்கூடும்.

ஒரு பெண் அல்லது ஆண் வாழ்க்கைத் துணைவரை அவரது பாதுகாப்புக்கு அல்லது பொது நலத்திற்கு அச்சுறுத்தல் ஏற்படும் வகையில் அவரை மிரட்டுவதன் மூலம் அவரைக் கட்டுப்படுத்த முயலும் நடத்தை வீட்டு, குடும்ப வன்முறையாகும்.

## அவுஸ்திரேலியாவில் வீட்டு அல்லது குடும்ப வன்முறைக்கு ஆளாகும் எவரும் ஆதரவு சேவைகளிடமிருந்து உதவி பெறலாம்.

உங்களது விசா அல்லது குடிவரவுத் தகுதி நிலை எப்படியிருந்தாலும் உங்களால் உதவி பெற இயலும்.

உங்களது மண உறவு முறிந்து விட்டதா அல்லது இல்லையா என்பது பிரச்சினையே அல்ல – உங்களால் எப்போதும் உதவி பெற முடியும்.

**1800RESPECT** என்பது ‘அவுஸ்திரேலிய தேசிய பாலியல் தாக்குதல், வீட்டு, குடும்ப வன்முறை ஆலோசனைச் சேவை’ (Australia’s national sexual assault, family and domestic violence counselling service) ஆகும். இலவச, இரகசியமான தொலைபேசி, இணையவழி ஆலோசனையையும் தகவல்களைம் இது அளிக்கிறது. அறிவுரையாலோசகர்கள் நீங்கள் சொல்வதை செவிமடுத்துக் கேட்பர், உங்கள் கேள்விகளுக்கு பதிலளிப்பர், நீங்கள் வாழும் பகுதியிலுள்ள மற்ற ஆதரவு சேவைகளுக்கு உங்களைப் பரிந்துரைக்க அவர்களால் இயலக்கூடும்.

**1800 737 732** எனும் இலக்கத்தினை அழையுங்கள் அல்லது **1800RESPECT** இன் **www.1800RESPECT.org.au** எனும் வலைத்தளத்திற்குச் செல்லுங்கள்

## உரைபெயர்ப்பாளர் ஒருவர் தேவையா?

**131 450** எனும் இலக்கத்தில் ‘மொழிபெயர்ப்பும் உரைபெயர்ப்பும் சேவை’ **(Translating and Interpreting Service)** ஐ அழையுங்கள். மற்றச் சேவைகளுடன் தொடர்புகொள்ள TIS உரைபெயர்ப்பாளர் ஒருவர் உங்களுக்கு உதவ இயலும். TIS அறிவுரையாலோசனை அளிப்பதில்லை. அழைப்புக்கள் யாவும் இலவசமானவையும் இரகசியம் பேணுபவையம் ஆகும்.

## உங்களுக்கு ஒரு விசா இருந்தால் குடும்ப வன்முறையைப் பற்றிய மேலதிகத் தகவல்களுக்கு:

உண்ணாட்டு அலுவல்கள்திணைக்களத்தின் **(Department of Home Affairs)** **www.homeaffairs.gov.au** எனும் வலைத்தளத்தில் குடும்ப வன்முறையும் விசாக்களும் பற்றிய மேலதிகத் தகவல்கள் கிடைக்கப் பெறுகின்றன.